

விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தில், கனமழை காரணமாக மழைநீர் தேங்குவதை தொடர்ந்து, மழைநீர் வடிகால் அமைப்பது தொடர்பாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கா.பொன்முடி ஆகியோர் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டனர். மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சி.பழனி , விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் அ.சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், நகர மன்ற தலைவர் தமிழ்செல்வி பிரபு, நகர செயலாளர் இரா.சக்கரை, நகர மன்ற துணை தலைவர் சித்திக் அலி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### நமது இலட்சியப் பயணத்தில்

# கொண்ட கொள்கைகளும் - செய்யும் சாதனைகளுமே வாளாகவும் கேடயமாகவும் துணை நிற்கும்!

## 3 ஆண்டுகள் சாதனை மலரை வெளியிட்டு - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஆக.16-

நமது இலட்சியப் பயணத்தில், கொண்ட கொள்கைகளும் செய்யும் சாதனைகளுமே வாளாகவும் கேடயமாகவும் துணைநிற்கும் தலைசிறந்த மூன்றாண்டு! தலைநிமிர்ந்த தமிழ்நாடு!" சாதனை மலரை வெளியிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**நாள்தோறும் திட்டங்கள் கொண்டுவந்து, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் நமது திராவிட மாடல் அரசின் வெற்றிப் பயணத்தைத் "தலைசிறந்த மூன்றாண்டு! தலைநிமிர்ந்த தமிழ்நாடு!" என ஆவணப்படுத்தி, சாதனை மலராக செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.**

**அறிவிற்சிறந்த அறிஞர் பெருமக்களது கட்டுரைகளுடன் வெளியாகியுள்ள இந்தக் கருத்துப் பெட்டகத்தை உங்களுடன் பகிர்கிறேன்.**

**நமது இலட்சியப் பயணத்தில், கொண்ட கொள்கைகளும் செய்யும் சாதனைகளுமே வாளாகவும் கேடயமாகவும் துணை நிற்கும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### அம்மாச்சத்திரம் அருகே நிகழ்ந்த சாலை விபத்தில்

# உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

புதுக்கோட்டை, ஆக 16 -

புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் வட்டம், வடவாளம், தெற்கு செட்டியாப்பட்டி, சொரியன் தெருவைச் சேர்ந்த திருமதி. மாரிக்கண்ணு (வயது 46) க/பெ. ரெங்கசாமி என்பவர் கடந்த 07.08.2024 அன்று சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு பாதயாத்திரையாக சென்றபோது புதுக்கோட்டை மாவட்டம், அம்மாச்சத்திரம் அருகே இருசக்கர வாகனம் ஒன்று எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மூளைச்சாவு அடைந்து சிகிச்சை பலனின்றி 08.08.2024 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் மூளைச்சாவு ஏற்பட்டதைத் தொடர்ந்து உயிரிழந்த திருமதி. மாரிக்கண்ணு அவர்களின் உடல் உறுப்புகள் அவரது குடும்பத்தினரின் சம்மதத்துடன் தானமாக வழங்கப்பட்டு அவரது உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. திருமதி. மாரிக்கண்ணு அவர்களது குடும்பத்தினரின் தியாக உணர்வை தமிழ்நாடு அரசு போற்றுகிறது.

இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### திராவிட மாடல் ஆட்சியில்

# ராம்சர் தலங்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஆக.16-

'தமிழ்நாட்டில் உள்ள ராம்சர் தலங்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது. நமது திராவிட மாடல் ஆட்சி நிர்வாகம் சுற்றுச்சூழலைக் காப்பதில் கொண்டுள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது' என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைத்தளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அது வருமாறு :

**திருப்பூர் மாவட்டம் நஞ்சராயன் பறவைகள் காப்பகம் மற்றும் விழுப்புரம் மாவட்டம் கழுவேலி பறவைகள் காப்பகம் ஆகியவற்றுடன் சேர்த்து தமிழ்நாட்டில் உள்ள ராம்சர் தலங்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.**

**இந்தத் தொடர் சாதனை தமிழ்நாடு வனத்துறையின் அர்ப்பணிப்பு மிகுந்த முயற்சிகளையும், நமது திராவிட மாடல் ஆட்சி நிர்வாகம் சுற்றுச்சூழலைக் காப்பதில் கொண்டுள்ள உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### வணிக வரித்துறை சார்பில் -அனைத்து இணை ஆணையர்களின்

# பணித்துறை குறித்து ஆய்வுக் கூட்டம்! ஊக்கத் தொகை வழங்கல்!

## அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக.16-

வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமையில் நேற்று முன்தினம் (14.08.2024) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில் 2024ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தின் போது வணிகவரித்துறை வரி பகுத்தாய்வுப் பிரிவில்(Tax Research Unit) சிறப்பாக பணியாற்றி அரசுக்கு கூடுதல் வருவாய் ஈட்டித்தந்த இராம்குமார், உதவி ஆணையர் (மாவ) மற்றும் முஹம்மது இர்ஃபான், மாநில வரி அலுவலர், ஆகியோருக்கு ஊக்கத்தொகையாக ரூ.1,00,000/ (ரூபாய் ஒரு லட்சம்) காசோலையை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார்.

நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி வளாகத்தில் உள்ள வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையத்தில், துறைசார்ந்த பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டுள்ள தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 24 வணிகவரி உதவி ஆணையர்கள் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தைச் சார்ந்த ஆறு உதவி ஆணையர்களை அமைச்சர் சந்தித்து பயிற்சியாளர்களிடம் பயிற்சி விவரங்களை கேட்டறிந்து, நல்ல முறையில் பயிற்சி பெற்று, சிறப்பாக பணியாற்றுமாறு அறிவுரை வழங்கினார்.

மேலும் அனைத்து இணை ஆணையர்களும் தங்கள் கோட்டங்களை சார்ந்த பகுதிகளில் அடிக்கடி ஆய்வு செய்து, போலியில் தயாரித்து வணிகம் செய்யும் நிறுவனங்களை கண்டறிதல், ரூபாய் 40 லட்சத்திற்கு மேல் தொழில் செய்வோர் விவரங்களை கண்டறிந்து GST வரம்பிற்குள் கொண்டுவருதல், தொடர்ந்து அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தும் நிறுவனங்களின் பதிவை ரத்து செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்தல், உள்ளிட்ட பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

இக்கூட்டத்தில் வணிக வரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி. துர்கா மூர்த்தி, வணிகவரித்துறை கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரை! சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ தலைமை!

# இளைஞர் அணி, மகளிர் அணி உறுப்பினர்கள் சேர்க்க தீவிர களப்பணி!

## கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்!

கடலூர், ஆக.16-

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ தலைமையில், என்.எல்.சி தொமுச கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் (14.8.2024 - புதன்கிழமை) காலை 10 மணி அளவில் நடைபெற்றது.

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் ஜி.தண்டபாணி, மாவட்ட கழக துணை செயலாளர் பி.வி.பி. முத்துக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சா.இராசவன்னியன், வி.கே. வெங்கட்ராமன், பாவாடை கோவிந்தசாமி, முன்னாள் எம்.எல்.ஏ. கலைச்செல்வன், ஒன்றிய கழக செயலாளர்கள் பட்டுர் அமிர்தலிங்கம், தி. வேல்முருகன், குணசேகரன், செங்குட்டுவன், ஆசைதம்பி, சந்தோஷ், சுரேஷ், பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன்,

நகர கழக செயலாளர்கள் க.தண்டபாணி, ப.மணிவண்ணன், வி.குருநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.பலராமன், அரங்க. பாலகிருஷ்ணன், பொ.புகழேந்தி, க.அறிவழகன், செந்தமிழ் செல்வி, கருப்பசாமி, பேரூர் கழக செயலாளர்கள் வி.பி.பி.பரமகுரு, செல்வம், ஜெயமூர்த்தி, சுந்தர வடிவேல், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார், துணை அமைப்பாளர்கள் ராஜேஷ், பாண்டுரங்கன், தங்க நாராயணசாமி, சுரேஷ், சதாம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க.வெங்கடேசன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ராமு, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சேகர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயந்தி, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் இந்துமதி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் கோனூர் மதியழகன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் அறிவுடைய நம்பி, மாவட்ட வழக்கறி அணி தலைவர் பாரி இப்ராஹிம் ,மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் வழக்கறிஞர் மதன குரு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் ராஜேஷ், நெல்லிக்குப்பம் நகர மன்ற தலைவர் ஜெயந்தி ராதாகிருஷ்ணன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செல்வமணி, மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் முகமது யூசுப், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அமுதா, துணை அமைப்பாளர் திராவிட செல்வி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், மாவட்ட இளைஞரணி துணை வேட்பாளர்கள் ,நகர இளைஞரணி அமைப்பாளர்கள் ,துணை அமைப்பாளர்கள் மற்றும் கிளை கழக நிர்வாகிகளுடன், அந்தந்த பகுதிகளில் உள்ள இளைஞரணி நிர்வாகிகளின் ஒத்துழைப்புடன் இல்லம்தோறும் நேரில் சென்று கழகத்திற்கு மேலும் வலு சேர்க்கின்ற வகையில் அதிக அளவில் இளைஞரணி உறுப்பினர்களை சேர்க்க வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

திட்டக்குடி, விருத்தாச்சலம், நெய்வேலி பண்ருட்டி ,ஆகிய சட்டமன்ற தொகுதியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளுக்கு, ஏற்கனவே நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி முகவர்களுடன் அந்தந்த பகுதியின் வாக்குச்சாவடிகளுக்கு மேலும் இரண்டு இளைஞர் அணி நபர்களின் பெயர்களை இடம் பெறும் வகையில் புதிய பட்டியல் தயார் செய்து மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க வேண்டும் என ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளை கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவையொட்டி, இளைஞரணி சார்பில் மாபெரும் பேச்சுப்போட்டி சிறப்பாக நடத்திட திட்டக்குடி, விருத்தாச்சலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், நகர இளைஞரணி அமைப்பாளர்கள், மற்றும் அந்தந்த கிளை கழக நிர்வாகிகளின் ஒத்துழைப்புடன் தங்கள் பகுதியில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிக்கு கல்லூரிகளுக்கு சென்று பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள மாணவர்கள் மற்றும் இளைஞர்களை தேர்வு செய்து அவர்களுக்கு பயிற்சி அளித்து அவர்களை மாநில மாவட்ட அளவில் நடைபெற உள்ள பேச்சு போட்டியில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்ய இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

திட்டக்குடி, விருத்தாச்சலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், அந்தந்த பகுதிகளில் உள்ள கிளை கழக நிர்வாகிகளுடன் ஒன்றிணைந்து தங்கள் பகுதியில் உள்ள இல்லங்களுக்கு நேரில் சென்று மகளிர் அணிக்கு பெரும் அளவில் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என கூட்டம் தீர்மானிக்கிறது .

இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### அரியலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையில் பணிபுரியும்

# வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு 8 புதிய வாகனங்கள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர்,ஆக. 16–

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் மாவட்டத்தில், ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட ரூ.75.72 இலட்சம் மதிப்பிலான 08 வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வரும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் வழங்குதல், சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தி, உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளை நிறைவேற்றும் களப்பணியில் ஈடுபடும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.75.72 இலட்சம் மதிப்பிலான 08 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் கொடியசைத்து தொடங்கி வைத்து, வாகனங்களுக்கான சாவிகளை அலுவலர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ம.ச.கலைவாணி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத்திட்ட இயக்குநர் கவிதா, அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, மாவட்ட துணை செயலாளர் சி.சந்தரசேகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் மா.அன்பழகன், கோ.அறிவழகன், நகர ணெயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு மேற்கு தாம்பரம் செல்வ விநாயகர் மற்றும் கோதண்ட ராமர் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தில் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் மற்றும் துணை மேயர் கோ.காமராஜ் 49 வது வார்டு மாமன்ற உறுப்பினர் டி.காமராஜ் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிபேட்டை ஆர். காந்தி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி ஆகியோர் பூவிருந்தவல்லி திருக்கச்சி நம்பிகள்(ம) வரதராஜப் பெருமாள் திருக்கோயில், சுதந்திர தின சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் பூவிருந்தவல்லி நகர மன்றத் தலைவர் காஞ்சனா சுதாகர், துணைத் தலைவர் க.ஸ்ரீதர், நகரச் செயலாளர் ஜி.ஆர். திருமலை, கவுன்சிலர் நீலாவதி ஐயப்பன், செயல் அலுவலர் மா.மாதவன், அறங்காவலர் குழுத் தலைவர் மோ.பாபு, அறங்காவலர் உறுப்பினர்கள் டாக்டர். என்.ஆர்.வெங்கடேசன், பி.கோபிநாத் மற்றும் பொதுமக்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.